(Under Section.173 BNSS) FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109490

16/2025/AC/CB

1. District : மாவட்டம் Coimbatore PS: காவல்நிலையம் VF AC Coimbatore Year: ஆண்டு 2025 FIR No.: மு.த.அ. எண் Date: நாள் 21/08/25

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7 (b) and 7(a)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 13.06.2025 Date to : நாள் வரை 20.08.25

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.08.2025 Time : நேரம் 15.30hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 21.08.2025 Time : நேரம் 09.45hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் North about 15km

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o Town panchayat Periyanayakan palayam Coimbatore District.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. Anandavel (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Pillavadi

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 53 yrs (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

(f) Occupation : தொழில் Self Employment (g) Address : முகவரி D.no.39 Sri Ganapathy nagar Pudhu kuranatham Road, Saravanampatty Coimbatore Dist

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

S Sakthikumar, Bill Collector O/o Periyanayakanpalayam Town panchayat, Periyanayakan palayam, Coimbatore Dist

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIF Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted

Separate sheets attached herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS .....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

21/8/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
டெருவிரல் இரேகைப் பதிவு

21/08/25

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதி மன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

21/08/25 11.00hrs

D. SHEELA
Name: பெயர் .....
Rank: நிலை .....No. எண் .....
Inspector of police
Vigilance and Anti-Co

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.16/2025/AC/CB, u/s.7(b) and 7(a) of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

20.08.2025-ம் தேதி மாலை சுமார் 18.30 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் D. ஷீலா ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது P.ஆனந்தவேல், வயது 53, த/பெ.பிலாவடி, கதவு எண் 39, ஸ்ரீ கணபதிநகர், புதுகீரநத்தம் ரோடு, சரவணம்பட்டி, கோவை. என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்து மூலமான புகார் ஒன்றினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புனர் P.ஆனந்தவேல், வயது 53, த/பெ.பிலாவடி, கதவு எண் 39, ஸ்ரீ கணபதிநகர், புதுகீரநத்தம் ரோடு, சரவணம்பட்டி, கோவை. பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, கோவை. அய்யா, நான் மேற்கண்ட முகவரியிலுள்ள எனது சொந்த வீட்டில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 7 வருடங்களாக பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கும் தொழிலை எனது வீட்டின் ஒரு அறையில் வைத்தே செய்து வருகிறேன். நான் கடந்த 18.10.2024ஆம் தேதியன்று பெரியநாயக்கன் பாளையம், ஏஞ்சல் அவன்யு SF.No.594/2-ல் 1310 சதுரடி கொண்ட சைட் எண்.11 என்ற இடத்தை வாசுதேவன் மகன் திரு.வி.முருகபிரசாத் என்பவரிடமிருந்து ரூ.4,46,000/-க்கு எனது பெயரில் வாங்கி, அதனை பெரியநாயக்கன்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.20914/2024ஆக பத்திரம் பதிவு செய்தேன். நான் வாங்கிய மேற்கண்ட இடம் அன்அப்ரூவல் சைட்டாக இருந்தது. அதனால் அந்த இடத்திற்கு அப்ரூவல் வாங்கவேண்டி எனக்கு தெரிந்தவர் மூலமாக 04.03.2025ஆம் தேதி ஆன்லைனில் பதிவு செய்து, அதன் Challan Number.20250304014954 பெற்றேன். மேலும் நான் பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்கு 13.03.2025 ஆம் தேதி சென்று அங்கிருந்தவர்களிடம் அப்ரூவல் சம்பந்தமாக EO அவர்களை பார்க்கவேண்டும் என்று கேட்டதற்கு, அங்கிருந்தவர் என்னிடம் EO அவர்கள் வெளியே சென்று விட்டதாக கூறினார். அதனால் அங்கிருந்த ஒரு அலுவலரிடம் நான் என்னுடைய அன்அப்ரூவல் வீட்டு மனையை அப்ரூவல் செய்வதற்கு தேவையான ஆவணங்களை EO அவர்களிடம் கொடுக்கும்படி கொடுத்துவிட்டு வந்தேன். அதன்பின்பு பல முறை அந்த அலுவலகத்திற்கு நேரில் சென்றும் EO அவர்களை பார்க்க முடியவில்லை. அப்போது அலுவலகத்தில் இருந்தவர்களிடம் விசாரித்த போது இது சம்பந்தமாக பில்கலெக்டர் சதீஸ்குமார் அவர்களை பார்க்க சொன்னார்கள். நானும் அலுவலகத்தில் இருந்த பில்கலெக்டர், திரு.சதீஸ்குமார் என்பவரை சந்தித்து அவரிடம் நான் வாங்கிய இடத்தை அப்ரூவல் பெறுவதற்காக EO அவர்களை பார்க்க

வர்தேன் என்ற விபரத்தை அவரிடம் சொன்னேன். அப்போது அவர் EO வெளியே சென்றுள்ளார், அவர் உங்களை பார்க்கமாட்டார், என்னைதான் அனைத்தையும் அப்ரூவல் செய்வது சம்பந்தமான வேலைகளை எனிடம் பார்க்க சொல்லியுள்ளார் என்று கூறினார். அதற்கு நான் அப்ரூவல் பெறுவதற்காக ஆன்லைனில் பதிவு செய்த விபரத்தை சொன்னபோது, அவர் எனிடம் இது சம்பந்தமான ஆவணங்களை கேட்டார். நான் ஏற்கனவே ஆவணங்களை அலுவலகத்திலிருந்து ஒரு அலுவலரிடம் கொடுத்த விபரத்தை சொன்னேன். அப்போது அவர் அவர்களிடமிருந்து எனது ஆவணங்களை பெற்றுக்கொண்டார். பின்பு பலமுறை பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி அலுவலகத்திற்கு சென்று அப்ரூவல் சம்பந்தமாக விசாரித்து வந்தேன். பின்னர் சுமார் இரண்டு மாதம் கழித்து அலுவலகம் சென்று பில்கலெக்டர் திரு.சதீஸ்குமார் அவர்களை சந்தித்தபோது, திரு.சதிஸ்குமார் அவர்கள் EO தனனையே சைட்டை பார்த்துவரச் சொன்னதாக சொன்னார். அதன்படி அன்றே எனது சைட் அமைந்துள்ள பெரியநாயக்கன்பாளையம் ஏஞ்சல் அவன்யுவிற்கு இன்ஸ்பெக்சன் பார்க்க அழைத்து சென்று வந்தேன். நான் மீனட்டும் 2-நாள் கழித்து 13.06.2025ஆம் தேதி பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி அலுவலகத்திற்கு சென்று பில்கலெக்டர் திரு.சதீஸ்குமார் அவர்களை சந்தித்தபோது, அவர் வரன்முறைபடுத்த வங்கியில் பணம் கட்டவேண்டும் என்று சொல்லி பெரியநாயக்கன்பாளையம் SBI வங்கிக்கு எனனை அழைத்து சென்று ரூ.6,466/-ஐ வங்கியில் செலுத்தி அதற்குண்டான Challan Number:20250613004944, நாள் 13.06.2025 பெற்றுக்கொடுத்தார். நான் அவரிடம் இந்த தொகை எதற்காக என்று கேட்டதற்கு, அவர் பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்கு கட்டவேண்டிய தொகை என்று எனிடம் சொன்னார். அன்றைய தினமே அவர் என்னிடம் இடத்தை அப்ரூவல் செய்து கொடுக்க ஏற்பாடு செய்வதற்கு தனியாக ரூ.55,000/-ம் கொடுக்க வேண்டும் என்றும், அதில் ரூ.5000/-ம் அவருக்கும், பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி அலுவலகத்தில் உள்ளவர்கள் யாராவது கேட்டால் ரூ.50,000/-மட்டும்தான் கொடுத்ததாக சொல்ல வேண்டும் என்றும் சொன்னார். உடனே நான் எனது கூகுள்பே மூலமாக ரூ.5000/- அவரது செல்போன் எண்.9894311881, சதீஸ்குமார் என்ற பெயருக்கு 13.06.2025ஆம் தேதி அன்று 12.18மணிக்கு எனது செல்போன் எண்.8903619558 மூலமாக அனுப்பிவைத்தேன். பின்னர் பில்கலெக்டர் திரு.சதீஷ்குமார் அவர்கள் 23.06.2025ஆம் தேதி அன்று எனது செல்போனிற்கு அழைத்து உங்களது இடத்தை அப்ரூவல் செய்து கொடுக்க மீதமுள்ள தொகை ரூ.50,000/-யை கொடுங்கள் என்று சொன்னார். அதன்படி எனது இடத்தை அப்ரூவல் செய்யவேண்டுமே என்பதற்காக நான் மேற்கூறிய அவருடைய கூகுள்பே எண்ணிற்கே என்னிடம் இருந்த தொகை ரூ.30,000/-யை 23.06.2025 அன்று 09.39 மணிக்கு அனுப்பினேன். உடனே அவர் என்னை மீண்டும் அழைத்து

மீதமுள்ள தொகை ரூ.20,000/-யை கொடுக்குமாறு கேட்டார். அதற்கு நான் அவரிடம் அப்ரூவல் செய்து கொடுத்த பிறகு மீதமுள்ள தொகையை கொடுப்பதாக சொன்னேன். அதற்கு அவர் அப்படியெல்லாம் முடியாது பணம் கொடுத்தால்தான் அப்ரூவல் செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய முடியும் என்று கராராக சொன்னார். அதற்கு நான் அவ்வளவு பணம் என்னால் ஏற்பாடு செய்ய முடியாது என்று சொல்லிவிட்டேன். அதற்கு அவர் கேட்ட பணம் ரூ.50,000/-ஐ கொடுக்கவில்லை என்றால் அப்ரூவல் செய்ய ஏற்பாடு செய்யமுடியாது என்று கூறினார். நானும் அப்படியென்றால் நான் கொடுத்த பணத்தை எனது கூகுள்பேக்கு அனுப்பி வைத்துவிடுங்கள் என்று சொன்னேன். அதன் பின்னர் 27.06.2025ஆம் தேதியன்று எனது கூகுள்பே கணக்கிற்கு ரூ.35,000/-யை அனுப்பிவைத்தார். பின்னர் நான் அவரை தொடர்பு கொள்ளவில்லை. அதன்பின்னர் திரு.சதீஸ்குமார் அவர்களே 15.08.2025 அன்று மாலை சுமார் 07.30 மணிக்கு எனது செல்போனிற்கு அழைத்து என்னிடம் அலுவலகம் வாங்க அப்ரூவல் பண்ணிக்கலாம், EO-கிட்ட பேசிட்டேன், வருகின்ற திங்கட்கிழமை அலுவலகம் வாங்க, அப்போது பேசிக்கலாம் என்று சொன்னார். அதன்பேரில் நான் 18.08.2025ஆம் தேதி திங்கட்கிழமை பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி அலுவலகம் சென்று அங்கிருந்த திரு.சதீஸ்குமார் அவர்களை சந்தித்தேன். அப்போது அவர் என்னிடம் ரூ.66,000/-ம் கொடுத்திடுங்க என்றார், அதற்கு நான் அவரிடம் பணம் அதிகமாக கேட்கிறீங்க என்றேன், அதற்கு அவர் EO-சொல்றமாதிரி உங்க இடத்தை இன்ஸபெக்சன் பார்த்து முடித்துள்ளேன், அதற்காகவும் அப்ரூவல் வாங்க மேல் அதிகாரிக்கும் பணம் கொடுக்கனும், அதனால் பணம் குறைக்க முடியாது என்றும், LPA-விற்கு அவரே பணத்தை செலுத்துவதாகவும், ஒரு வாரத்தில் என்னுடைய அப்ரூவல் வாங்கி கொடுத்துவிடுவதாகவும் சொன்னார். நான் அவரிடம் பணம் ரெடி செய்துவிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்தேன். பின்னர் திரு.சதிஸ்குமார் அவர்கள் 19.08.2025 அன்று மதியம் சுமார் 01.15 மணிக்கு எனது செல்போனிற்கு அழைத்து LPA-க்கு நான் காலையிலே போயிட்டு பையிலை கொடுத்து முடிச்சிட்டு அங்கிருந்து கூப்பிடுரேன், மதியானத்திற்கு மேல் வந்திருங்க என்று சொன்னார். மேலும் மதியானம் பணம் ரெடி பண்ணிவையுங்க, கொடுக்கற மாதிரி இருக்கும், வந்து கொடுத்திட்டு போயிருங்க என்று சொன்னார், அதற்கு நான் எவ்வளவு கொடுக்கனும் என்று கேட்டேன். அதற்கு அவர் கம்மிபண்ணிதான் ரூ.65,000/- சொல்லியிருக்கேன் என்று சொன்னார். பின்னர் நான் குறைக்க சொன்னதற்கு, ஏன் பேரம் பேசிறீங்க, கெஞ்சி கூத்தாடி உங்களுக்கு அப்ரூவல் ஏற்பாடு செய்வதற்கு போதும் போதும்னு ஆயிருச்சு, அதில் ரூ.25,132/- LPA அலுவலகத்திற்கு உள்ளே செலுத்தவேண்டிய கட்டணம் என்றும், EO-க்கு தனியாக கொடுக்கவேண்டியது ரூ.20,000/- என்றும் LPA-க்கு தனியாக கொடுக்கவேண்டியது ரூ.20,000/- என்றும் மொத்தம் ரூ.40,000/- கொடுக்க

வேண்டும் என்று சொன்னார். நானும் வேறு வழியில்லாமல் சரியென்று சொல்லிவிட்டேன். பின்னர் பில்கலெக்டர் திரு.சதீஸ்குமார் அவர்கள் என்னை இன்று 20.08.2025-ஆம் தேதி காலை சுமார் 11.35 மணிக்கு எனது செல்போனிற்கு அழைத்து இடத்தை அப்ரூவல் செய்ய ஆன்லைனில் பணம் ரூ.500/- கட்டிய ரசீதை கேட்டார். நான் எனது WhatsApp மூலமாக அவருக்கு அனுப்பிவைத்தேன். மீண்டும் என்னை காலை சுமார் 11.45 மணிக்கு அழைத்து என்னிடம் பிரின்ட் எடுத்து பைலில் வைத்து விடுவதாகவும், பணத்தை எப்போ கொண்டு வருவீங்க, மதியம் கொண்டு வருவீங்களா என்றும், இல்லனா எத்தனை மணிக்கு வருகிறீர்கள் என்று கேட்டார். நான் அவரிடம் எத்தனை மணிக்கு வரட்டும் என்று கேட்டதற்கு, அவர் சுமார் 4-மணிக்கு வந்திடுங்க என்று சொன்னார், அதற்கு நான் கால்பண்ணிட்டு வரேன் என்று சொல்லிவிட்டேன். எனது இடத்தை இன்ஸ்பெக்சன் பார்த்ததற்கும், அப்ரூவல் ஆர்டர் பெற்று கொடுப்பதற்க்காக ஏற்பாடுகள் செய்து கொடுப்பதற்க்காவும், லஞ்சமாக பணம் ரூ.40,000/- பில்கலெக்டர் திரு.சதீஸ்குமார் அவர்களுக்கு கொடுக்க எனக்கு விருப்பமில்லை. அதனால் லஞ்சமாக பணம் ரூ.40,000/- கேட்ட மேற்படி பில்கலெக்டர் திரு.சதீஸ்குமார் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் இத்துடன் பில்கலெக்டர் திரு.சதீஸ்குமார் அவருடன் போனில் 19.08.2025 ஆம் தேதி மதியம் சுமார் 01.15 மணிக்கு மற்றும் 20.08.2025ஆம் தேதி காலை சுமார் 11.45 மணிக்கு பேசிய உரையாடல்களை DVD-ல் பதிவு செய்து எனது புகாருடன் இணைத்துள்ளேன். இப்படிக்கு, sd/-(xxxx) 20.08.2025 (P.ஆனந்தவேல்). மேற்படி புகார் சம்பந்தமாக ரகசிய விசாரணை மேற்கொண்டதிலிருந்தும் புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையே தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்து மேற்கொள்ளப்பட்ட ரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும், புகார்தாரரின் புகாரின் உண்மைதன்மை உறுதி செய்யப்பட்டது. மேலும் வாதி ஆஜர் செய்த வாதிக்கும் எதிரிக்கும் போனில் நடந்த உரையாடல்கள் அடங்கிய DVD-யை கேட்டுப்பார்க்கப்பட்டு அதன் பதிவை மற்றொரு DVD-ல் விசாரணைக்காக பதிவிறக்கம் செய்தும், வாதியிடமிருந்து 63(4)(c) of BSA 2023 சான்றிதழ் பெறப்பட்டது. எனவே எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புதுறை இயக்குநகாத்திலிருந்து வாய்மொழி உத்தரவு பெற்று இன்று 21.08.2025 காலை 09.45மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 16/2025/AC/CB u/s.7(b) and 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018-படி மேற்படி எதிரி, திரு.சதீஸ்குமார், பில்கலெக்டர், பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி, கோவை என்பவர் மீது

குற்றவழக்கு பதிவு செய்தேன். Respected Madam, received the above complaint on 20.08.2025 at 18.30 hrs. Sd/- x-x-x-x 20.08.2025 (D.Sheela), Inspector of Police, V&AC, Coimbatore. Respected Madam, after conducting a discreet enquiry and getting concurrence from DVAC, Chennai, a case in Coimbatore V&AC Cr.No.16/2025/AC/CB u/s. 7(b) and 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 has been registered by me on 21.08.2025 at 09.45 hrs. Sd/- x-x-x-x (D.Sheela), Inspector of Police, V&AC, Coimbatore. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு, DVD, வாதியின் சான்றிதழ் மற்றும் காவல் ஆய்வாளரின் File Hash value report with certificate u/s 63(4)(c) BSA 2023 சான்றிதழ் ஆகியவற்றை இணைத்து கனம் முதன்மை மாவட்ட/அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

21/08/2025

(D.ஷீலா)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.